செ.வெ.எண் : 198 நாள்: 28/02/2011

கலை பண்பாட்டுத் துறை

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

செய்திக் குறிப்பு

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்களின் சமூக பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கென தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் என்ற அமைப்பினை தோற்றுவித்துள்ளது. இவ்வமைப்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் இதுவரை 25,927 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். இவர்களில் 5022 பேருக்கு இதுவரை ரூ. 69,09,817/– நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. நலத்திட்ட உதவிகளை கலை பண்பாட்டுத் துறை மண்டல உதவி இயக்குநர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கலைஞர்களுக்கு உடனுக்குடன் நலத்திட்டம் பெற வேண்டும் என்பதற்காகவும், வாரியத்தில் தங்களை காலதாமதமின்றி இணைத்துக் கொள்வதற்கு ஏதுவாக இருப்பதற்காகவும், கலை பண்பாட்டுத்துறை மண்டல உதவி இயக்குநர்கள் வாரிய அலுவலகத்துடன் கணினி மயமாக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்களை கீழிறக்கம் செய்து கொள்வதற்கு ஏதுவாகவும், தங்களது பதிவுகளையும் புதுப்பித்துக் கொள்வதற்காகவும், ஆன்லைனில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாகவும் நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்திற்கென தனியாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் முகவரி www.tnfolkarts.in

கலை பண்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியச் செயலாளர் திரு. ப.அ.மணி. இ.வ.ப., அவர்கள் தலைமையில் 28.02.2011 அன்று மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் இந்த இணையதளத்தினை துவக்கி வைத்தார்கள். நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் 60 வயது நிறைவடைந்த சுமார் 500 கலைஞர்களில் 70 பேருக்கு தற்போது ஒய்வூதியம் வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 33 பேருக்கு மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் அவர்கள் ஒய்வூதிய ஆணையை வழங்கினார்கள்.

ஆணையர்
கலை பண்பாட்டுத் துறை

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9